00005

සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

## இலங்கை விஞ்ஞான சேவை / இலங்கை கட்டடக் கலைஞர் சேவை அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை -2018 (I)

| | | |
|---|---|---|
| காலம் 03 மணித்தியாலங்கள் | நிர்வாகம் (2-III) | විභාග අංකය Index No / சுட்டெண் ........................................ |

ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.

---

01. i. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைய அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனங்களை நெறிப்படுத்தும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பத்தை (10) குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

ii. அரசாங்க சேவையிலுள்ள ஆட்சேர்ப்புத் திட்டமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவை? (10 புள்ளிகள்)

அந்த ஆட்சேர்ப்புத் திட்டம் யாரால் அனுமதிக்கப்படல் வேண்டும்?

02. i. அரசாங்க சேவைக்கு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்ட பின்னர் அவர் சார்பில் பேணிவரவேண்டிய சுயவிபரக் கோவையில் கட்டாயமாக உள்ளடக்கப்பட வேண்டிய ஆவணங்கள் பத்தை (10) குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

ii. பதவியொன்றில் பதில் கடமையாற்றுவதற்கு நியமிப்பதற்கான நிபந்தனைகள் யாவை? (10 புள்ளிகள்)

03. i. அரசாங்க உத்தியோகத்தரொருவருக்கு சேவைச் சான்றிதழ் ஒன்றை எத்தகையை சந்தர்ப்பங்களில் வழங்க முடியுமென்பதைக் குறிப்பிட்டு அவ்வாறான சேவைச் சான்றிதழொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் ஐந்தை (05) குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

ii. அவ்வாறான சேவைச் சான்றிதழொன்று யாரால் வழங்கப்படுதல் வேண்டும் என்பதை விளக்கி அவ்வாறு வழங்கும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களையும் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

04. i. அரசாங்க சேவையில் ஆரம்ப விசாரணை உத்தியோகத்தர் ஒருரால் நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான பணிகள் மூன்றை (03) விளக்குக. (10 புள்ளிகள்)

ii. ஆரம்ப விசாரணை அறிக்கையொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய பிரதான அம்சங்கள் ஐந்தை (05) குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

05. i. குற்றப்பத்திரமொன்றில் கட்டாயமாக உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் பத்தை (10) குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

ii. குற்றப்பத்திரமொன்றை திருத்துவதற்கு ஏற்புடைய நிபந்தனைகள் யாவை? (10 புள்ளிகள்)

ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය 03 JUL 2020 පුස්තකාලය

**06. i.** அரசாங்க சேவையில் அதிகாரம் என்பது எத்தகைய ஐந்து (05) செயற்பாடுகளுக்குரிய அதிகாரம் என்பதை குறிப்பிட்டு தற்போது இலங்கையில் அரசாங்க சேவையில் அந்த அதிகாரத்தை கொண்டுள்ள நியதிச்சட்ட நிறுவனங்களை குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

**ii.** அந்த நிறுவனங்கள் தற்போது அந்த அதிகாரத்தை கையளித்துள்ள (**Delegation**) முறையை உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

**07.** பின்வருவனவற்றுள் நான்கைப் (04) பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

**i.** சேவையை முடிவுறுத்தல்

**ii.** பதவியை வெறிதாக்கல்

**iii.** தகுதிகூர்நிலைக் காலம்

**iv.** அரசாங்க சேவையில் அதிகாரம்

**v.** எதிர்காப்பு உத்தியோகத்தர்

(புள்ளிகள் **05X4=20**)

*********

0 3 JUL 2023